சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்புத் துறை – கொரோனா வைரஸ் நோய் தொற்று (COVID–19) தடுப்பு நடவடிக்கையாக பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு தலா ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வீதம் 5048 நபர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்க ரூ.2,52,40,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை

அரசாணை (ப) எண் : 50

நாள் 03.06.2021
திருவள்ளுவராண்டு 2052,
பிலவ வருடம்,
வைகாசி 20–ம் நாள்

படிக்கப்பட்டது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 26.05.2021-ம் நாளிட்ட பத்திரிகை செய்தி

***

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி குறிப்பில், தமிழகத்தின் கொரோனா நோய் தொற்றின் தடுப்பு நடவடிக்கைகளையும் விழிப்புணர்வு பணிகளையும் சிறப்பாக மக்களுக்கு கொண்டு செல்லும் நாளிதழ்கள் / தொலைக்காட்சி செய்தியாளர் நலன் காக்கும் வகையில் ஊடகத்துறையினருக்கு நிவாரண உதவித் தொகையாக தலா ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

2. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 30.04.2021 அன்று வரை பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் (அரசு அங்கீகார அட்டை / மாவட்ட ஆட்சியர் வாயிலாக வழங்கப்பட்ட அடையாள அட்டை / இலவசப் பேருந்துப் பயண அட்டை போன்ற ஏதேனும் ஒரு வகையில் அரசால் அங்கீரிக்கப்பட்டவர்கள்) என மொத்தம் 5048 நபர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நடைமுறைப்படுத்திட தலா ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வீதம் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.2,52,40,000/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) அவர்களின் வங்கி கணக்கு வாயிலாக செலுத்த நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

த.பி.பா.,

**3.** மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> “2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 02– சமூக நலன் – 200 ஏனைய திட்டங்கள் – மாநிலச் செலவினங்கள் – AZ பத்திரிகையாளர்களுக்கு சிறப்பு நிதியுதவி – 309 உதவித் தொகை – 09 ஏனையவை.”
> (IFHRMS DPC 2235–02–200–AZ– 30909)
> Old DPC 2235-02-200-AZ–0990)

**4.** மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2,52,40,000/–ம் 2021–2022–ஆம் ஆண்டு நிதியாண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2021–2022–ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2021–2022–ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (து.வ (ம) செ/வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**5.** இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்ககம் அவர்கள் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

**6.** இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சார்பற்ற எண் 23032 / நிதி (து.வ (ம) செ)த் துறை/2021, நாள் 03.06.2021ன் படியும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 112 ( நூற்றி பன்னிரண்டு) உடன் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –9.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை –9/18.

நகல்
நிதி (வ.செ.பொ.1/ வ.செ.பொது II/ பொ.ப.I/(தவ(ம)செய்தி)த்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,சென்னை–9.
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
செய்தி மக்கள் தொடர்புத் துறை (கணக்கு/வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உபரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்